INDIAN JOURNAL OF TAMIL | Volume 2 | Issue 1

இந்திய தமிழ் ஆய்விதழ்

Check for updates

RESEARCH ARTICLE

# குறுந்தொகையில் இறைக்கொள்கைகளும் கோட்பாடுகளும்

**அ. ஸ்ரீ ஜனனி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, மங்கையர்க்கரசி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பரவை, மதுரை-625002, தமிழ்நாடு, இந்தியா.

# Theories and Principles of Theology in the Kuruntokai

**A. Sri Janani** [a, *]

[a] Department of Tamil, Mangayarkarasi College of Arts & Science for Women, Paravai, Madurai-625018, Tamil Nadu, India.

*Corresponding Author Email: srijananimc@gmail.com

(Received: 27th December 2020; Accepted: 09th Febuary 2021)

DOI: http://doi.org/10.34256/ijot2114

**Abstract:** The Kuruntokai of the ancient Tamil deities worshipped by Murugan, Surthaivam, Korravai, Kollipaavai and others is known from the Kuruntokai. The Velan fanaticism is found in the Sangam literature. This study is conducted in a way that explains the principles of theology found in the Sangam literature. The story of the Velan rampage, the worship of Korravai, the surat worship and the dance of women in the short story has explained this article.

**Key Words:** Kuruntokai, Velan rampage, Murugan, Korravai, Sangam literature

## முன்னுரை

சங்க இலக்கியங்களுள் ஒன்றாக விளங்கும் குறுந்தொகை நூலில் காணலாகும் இறை கொள்கைகளை இக்கட்டுரை விளக்க முற்படுகிறது. ஆதி மனிதன் இயற்கையிடமிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள இயற்கையை வழிபடத் தொடங்கினான். அவ்வழிபாடுகளில் இருந்து பல வழிபாட்டு முறைகளும், தெய்வங்களும் பலவாறாகக் காணப்பட்ட செய்திகளை இங்கு காண்போம்.

## தொல்காப்பியம் கூறும் இறைகோட்பாடு

“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே” (தொல்: 951)

என தொல்காப்பியர் 'மாயோன்' காடுடைய தெய்வமாகவும், குறிஞ்சியில் 'முருகன்' தெய்வமாகவும், மருதநிலத்தில் 'இந்திரன்' தெய்வமாகவும், நெய்தலில் 'வருணன்' தெய்வமாகவும் குறிப்பிடுகின்றார். 'நன்னடத்தைக்கு வேண்டப்படுவது சமய உணர்வே ஆகும்' என்கிறார் தாமஸ் ஹக்ஸ்லி. சமய உணர்வையும் சமய நம்பிக்கைகளையும் தோற்றுவித்து, அவற்றின் மூலமாக மானுட சமுதாயத்தை நன்னெறிக்கண் நின்றொழுகச் செய்ய முடியும் என்பதில் சங்கச் சான்றோர்க்கு மிகுந்த நம்பிக்கை இருந்துள்ளது." என்பார் க. முருகேசன் (Murugeasan, Classical Literary Sutras).

"சங்கப்பாடல்களில் கடவுள், தெய்வம் என்னும் சொற்கள் வழிபாட்டிற்குரிய எல்லாச் சாமிகளையும் குறிப்பிடுவதற்காகவே வருகின்றன. சில இடங்களில் தெய்வம் என்னும் பொருளைக் குறிப்பிடுவனவாகவும், சில இடங்களில் மேன்மை, சான்றோர், துறவிகள், நடுகல் வீரர்கள் என்னும் அர்த்தங்கள் கற்பிக்கப்பட்டன" 2 என குறிப்பிடுவார் அ.கா. பெருமாள் (Perumal, 2018).

வேலனும், முருகனும் சூர்த்தெய்வமும்

"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்

வெறியாட்டு அயர்ந்த காந்தளும்" (தொல். 1006)

என வேலன் வெறியாட்டினை தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

'தமிழர்; முருகு எனப்பட்ட ஓர் ஆற்றலையே முதலில் வணங்கினர். பின்னர் முருகு, முருகன் ஆக்கப்பட்டான்' என தொ. பரமசிவன் கூறுகிறார் (Paramasivan, 2001).

"நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்

வேலன் புனைந்த வெறிஅயர் களந்தொறும்

செந்நெல் வான்பொரி சிதறி அன்ன

................சூரர மகளிரொடு உற்ற சூளே" (குறு: 53)

என்று வெண்மணல் பரப்பில் வெறியாடுதற்கு வேலன் அலங்கரித்த களம் தோறும் செந்நெல்லின் வெண்பொரிகள் சிதறிக் கிடக்கிறது என கூறப்பட்டுள்ளது. மேலும் சூரர மகளிர் என்று சூர்த்தெய்வமும் கூறப்பட்டுள்ளது. இங்கு வேலன் வழிபாடும், வேலன் வெறியாடும் களம் செந்நெல் பொரிகளால் அலங்கரிக்கப்பட்டமையும் அறியலாம்.

"செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்

செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்" (திரு.206-207)

"சிறுதினை மலரொடு விரைஇ மறி அறுத்து

வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ

ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்" (திரு.220-223)

"செந்நூல் யாத்து வெண் பொரி சிதறி

மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்

குருதியொடு விரைஇய தூவெள் அரிசி" (திரு.227-230)

வெறியாடும் களத்தில் பூக்கள் பரந்து கிடக்கும். வெண்பொரி தூவப்பட்டிருக்கும். கோழிக்கொடி நடப்பட்டிருக்கும். களத்தின் ஒருபுறம் சந்தனம் தெளிக்கபட்டு ஆட்டுக்கிடா கடம்ப

மரத்தில் கட்டப்பட்டிருக்கும். குருதி கலந்த தினை, தானியம் பரப்பப்பட்டிருக்கும், நெய்யும் சிறுகடுகும் அப்பப்பட்ட வேல் நடப்பட்டிருக்கும். வேலன் சிவந்த ஆடை உடுத்தியிருப்பான் சிவந்த மாலை போட்டிருப்பான், கையில் காப்பு கட்டியிருப்பான், வெறியாட்டம் இரவில் நடக்கும் இதற்குப் பின்னனணியாகத் துடி அடிக்கப்படும், பாட்டும் பாடப்படும். முருகனுக்கு ஆட்டைப் பலி கொடுப்பர். அதன் குருதியுடன் வெண்ணிற அரிசியைப் பிசைந்து வீசுவர் என திருமுருகாற்றுப்படை கூறுகின்றது.

"வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்

கடவுள் ஆயினும் ஆக

மடவை மன்ற வாழிய முருகே" (நற் : 34)

நற்றிணையில், வேலன் வெறியாடி வேண்டிக் கொள்ள வெறிக்களத்திற்கு வந்திருக்கிறாய். நீ கடவுள் ஆயினும் ஆகுக, ஆனால் நீ அறியாமை உடைத்திருக்கிறாய் வாழ்க முருகன் என்று கூறப்பட்டுள்ளது. இங்கு வேலன் வெறியாட்டு பற்றிய செய்தி காணப்படுகிறது (Manickavasagan, 2007).

வேலன் வெறியாடுதல் வேலனுக்கு உரியது மட்டும் உரியது அன்று பெண்களும் வெறியாடினர் என,

"புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்

கடிஉண் கடவுட்கு இட்ட செழுங்குரல்

அறியாது உண்ட மஞ்சை ஆடுமகள்

வெறிஉறு வனப்பின் வெய்துற்று, நடுங்கும்

சூர்மலைநாடன்" (குறு: 105)

என்று குறவனது தினைப்புனத்தில் விளைந்த பொன் போன்ற வளமான தினைக்கதிர்களை புதிதாக உண்ணும் கடவுளுக்குப் பலியாகக் கொடுப்பர். அக்கதிரை அறியாது தின்று விட்ட மயில் கூத்தாடுகின்ற ஆடுமகள் வெறி உற்று ஆடுவது போன்ற அச்சம் தரும் சூர்த்தெய்வங்கள் உள்ள மலை என்று கூறப்பட்டுள்ளது. இங்கு கடவுளுக்குப் பலியாக புதிதாக விளைந்த தினைக்கதிர்களைக் கொடுக்கும் வழிபாட்டு முறையும், கூத்தாடும் ஆடுமகள் வெறியாடும் செய்தியும் அறியமுடிகிறது. "பண்டைத் தமிழரின் திணைக்குடித் தெய்வங்களில் பெண் தெய்வங்களில் ஒன்று சூர்தெய்வம், மலைத்தெய்வம்" என்பார் அ.கா. பெருமாள் (Perumal, 2018).

"மன்உயிர் அறியாத் துன்னரும் பொதியில்

சூருடை அடுக்கத்து ஆரம் கடுப்ப" (குறு: 376)

என்ற பாடலில் பொதிய மலையில் அச்சம் தரும் சூர்த்தெய்வம் உள்ள பகுதி என்று கூறப்பட்டுள்ளது (Balasubramanian, 2007). இங்கு சூர்த்தெய்வம் அச்சம் தரும் தெய்வம் என்று அறிய முடிகிறது.

"சூர் உடைநனம் தலை சுனை நீர்மல்க

பெரு வரை அடுக்கத்து அருவி ஆர்ப்ப

கல்அலைத்து இழிதரும் சுடுவரல் கான்யாற்று" ( நற் : 7)

என நற்றிணையில், சூர் தெய்வம் வருத்தும் தெய்வம் மலையில் உறைந்துள்ளது என கூறப்பட்டுள்ளது (Balasubramanian, 2007). மேலும் மற்றோர் பாடலில் அத்தகைய சூர்த்தெய்வம் அருவி

ஓசையையே இசையாகக் கொண்டு ஆடுகின்ற மலை என்றும் கூறப்பட்டுள்ளது. அதனைக் கீழ்க்கண்ட பாடலில் காணலாம்.

"பெருவரை அடுக்க பொற்ப சூர்மகள்

அருவி இன் இயத்து ஆடும் நாடன்" (நற் : 34)

தெய்வம் ஏறிய பெண்

"சூழ்நசைந் தனையாய் நடுங்கல் கண்ட" (குறு:52)

என இப்பாடலில், தெய்வ மகளிரால் விரும்பப்பட்டவள் போல நடுங்குகிறாள் தலைவி என கூறப்பட்டுள்ளது. இங்கு தெய்வம் ஏறிய பெண்ணின் நிலையை அறியலாம்.

சூர்த்தெய்வம் மக்களால் வழிபடப்பட்டு, அத்தெய்வத்திற்கு உணவாக செந்நெல் சோறு பலியாக வழங்கப்பட்டது என கீழ்வரும் பாடல் உணர்த்துகிறது.

"கரும் கண் கருனை செந்நெல் வெண்சோறு

சூர் உடை பலியொடு கவரிய குறும்கால்

கூழ் உடை நன்மனை குழுவின் இருக்கும்" (நற்: 359)

## கொல்லிப்பாவை

மலைப்பகுதியில் வாழும் 'கொல்லிப்பாவை' என்ற பெண்தெய்வ வழிபாட்டு முறை காணப்படுகிறது.

"பெரும்பூண் பொறையன் பேஎம் முதிர்கொல்லிக்

கருங்கண் தெய்வம்" (குறு: 89)

என்று கொல்லிப்பாவை கரிய கண்களை உடைய தெய்வமாகவும், அச்சம் தரும் தெய்வமாகவும் கூறப்பட்டுள்ளது.

## கொற்றவை

இலக்கியப்பரப்பில் கானுறை தெய்வமாக விளங்கும் காளிதேவி, கொற்றவை என்று அழைக்கப்படுகிறாள். போர்க்களத்தெய்வமாக கருதப்படுகிறாள். இத்தெய்வ வழிபாடு தாய்வழி சமூக அடையாளத்தைக் குறிப்பது எனலாம்" என்பார் ந. இரகுதேவன் (Ragudevan, 2018).

"விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்

கடனும் பூணாம், கைந்நூல் யாவாம்,

புள்ளும் ஓராம், விரிச்சியும் நில்லாம்" (குறு: 218)

என்று கொற்றவைக்கு உரிய கடன்களையும் செய்யோம், கையில் காப்பு நூலையும் கட்டோம், நிமித்தமும் பார்பதில்லை, நற்சொல் கேட்கவும் இல்லை, என தலைவி கூறுவதாக அமைந்துள்ளது. இங்கு கொற்றவை வழிபாடு அமைந்துள்ளது. மேலும் அவ்வழிபாட்டில் கையில் நூல் கட்டுதல், நற்சொல் கேட்டல், கொற்றவைக்கு உரிய கடன்கள் செய்தல் போன்ற முறைகள் இருந்தமையும் அறிய முடிகிறது. இச்சடங்குகள் செய்தால் பிரிந்த தலைவனை விரைவாகப் பெறலாம் எனவும் எண்ணினர்.

## முடிவுரை

பண்டைத் தமிழ்க்குடித் தெய்வங்களில் முருகன், சூர்த்தெய்வம், கொற்றவை, கொல்லிப்பாவை போன்ற தெய்வங்கள் வழிபடப்பட்ட செய்திகளை குறுந்தொகை மூலம் அறிய முடிகிறது. வேலன் வெறியாடுதல் சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. பெண்களும் தெய்வம் ஏறி ஆடியுள்ளனர், சூர்த்தெய்வம் அச்சம் தரும் தெய்வமாகவும், மலை உறை தெய்வமாகவும் கூறப்பட்டுள்ளது. இத்தெய்வங்கள் மக்களை நன்னெறிப்படுத்துவனவாக சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன.

## References

Balasubramanian, K.V., (2007) Kuṟuntokai, New Century Book House Pvt Ltd, Chennai, India.

Balasubramanian, K.V., (2007) Naṟṟiṇai, New Century Book House Pvt Ltd, Chennai, India.

Manickavasagan, S., (2007) Ten Idylls, Uma Publishing House, Chennai, India.

Murugeasan, K., Classical Literary Sutras, New Century Book House Pvt. Ltd., Chennai, India.

Paramasivan, T., (2001) Cultural Movements, Kalachuvadu Publications, Nagercoil, India.

Perumal, A.C., Ancient Tamil Worship Traditions, New Century Book House, Chennai. 2018

Ragudevan, N., (2018) sevvilakkiyam Sila Paarvaigal, New Century Book House Pvt. Ltd., Chennai, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License